செ.கு.எண் : 52 நாள் : 31.10.2023

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலிணங்க, நாடாளுமன்ற குழுத் தலைவர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் இன்று (31.10.2023) புதுதில்லியில் மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் திரு. வி. முரளிதரன் அவர்களை சந்தித்து, இலங்கை கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதை தடுத்து நிறுத்தவும், பறிமுதல் செய்யப்பட்ட அவர்களது படகுகளை திரும்ப வழங்கவும் வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்தை வழங்கிய பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:**

இலங்கையின் கடற்படை மிக மிக மோசமாக நம்முடைய தமிழ்நாடு மீனவர்களிடம் நடந்து கொள்வது குறித்து அன்புத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அக்டோபர் மாதத்திலிருந்து தொடர்ந்து நடைபெற்று கொண்டிருக்கின்ற இந்த கைது நடவடிக்கைகள், படகுகளை கைப்பற்றி எடுத்துச் செல்வது போன்ற நடவடிக்கைகளை கண்டித்து, கண்டிப்பதோடு மட்டுமல்லாமல், இதற்கு முழு முற்றாக உரிய நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுக்க வேண்டும் என்று நேற்று முன்தினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியிருந்தார்.

ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் நேற்று முதல் தொடர்ந்து மாநிலங்களுக்கு சுற்றுப்பயணம் சென்றிருக்கின்ற காரணத்தினால், இணை அமைச்சர் திரு.முரளிதரன் அவர்களை நேரில் சந்தித்து, பாதிக்கப்பட்ட தமிழ்நாடு மீனவர்கள், மீனவர்களுடைய தலைவர்களை அழைத்து சென்று, சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரையும் அழைத்து சென்று அவரிடம் நேரடியாக முறையிட்டு உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதின் விளைவாக, இன்று காலை 9.30 மணிக்கு வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு.முரளிதரன் அவர்களை நேரில் சந்தித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த முறையீட்டு கடிதத்தையும், அதேபோல மீனவர்கள் அளித்த கடிதத்தையும் ஒன்றாக

இணைத்து அவரிடம் கொடுத்தோடு, நேரடியாக மீனவர்களும் அவரிடத்தில் என்ன நடந்தது என்பதையும் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கடிதம் நேற்றே எனக்கு வந்துவிட்டது, நான் முறைப்படி நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறேன். நான் அங்கே இருக்கின்ற உயர் அதிகாரிகளிடம் நேரிடையாக தொடர்பு கொண்டிருக்கிறேன். ஆகவே இந்த 64 மீனவர்களை விடுவிப்பது, ஏறத்தாழ பத்து படகுகளை விடுவிப்பது போன்ற நடவடிக்கைகளில் நான் ஈடுபட்டு இருக்கிறேன் என்று திரு.முரளிதரன் அவர்கள் சொன்னார்கள். இடைமறித்து பேசிய நம்முடைய மீனவர்கள், படகுகளை விடுவிக்கின்ற நேரத்தில் படகுகளுக்கு உரிய முதலாளிகள் நேரடியாக வரவேண்டும் என்று இலங்கை நீதிமன்றம் அடிக்கடி சொல்கின்ற காரணத்தினால் அதிலும் தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அது குறித்தும் நான் நேரடியாக விளக்கம் கேட்டு, அது இல்லாமல் பார்த்துக் கொள்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் நம்முடைய இந்திய வழக்கறிஞரிடம் சொல்லி நீதிமன்றத்தில் முறையிடுகிறேன் என்று சொல்லி மாண்புமிகு திரு.முரளிதரன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்ற காரணத்தினால், கைப்பற்றப்பட்ட 12 படகுகள், தொடர்ந்து கைது செய்யப்பட்ட 12 மீனவர்கள், 14 மீனவர்கள், 15 மீனவர்கள் மற்றும் 23 மீனவர்களையும், விடுதலை செய்வதற்கு உரிய ஏற்பாடுகளை அங்கே இருக்கும் வழக்கறிஞரிடம் சொல்லி ஏற்பாடு செய்கிறோம் என்று உறுதிமொழி அளித்திருக்கிறார்கள்.

இது தொடர் நடவடிக்கையாக இல்லாமல், இந்த கைது நடவடிக்கை மீண்டும் நீடித்து விடாமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. நான் பார்த்து கொள்கிறேன் என்று சொல்லி இருக்கிறார். ஆகவே, அமைச்சர் அவர்கள் உரிய கரிசனத்தோடு இந்த பிரச்சனையை அணுகுவதாகதான் நான் அறிகிறேன். ஆகவே, தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, மீனவர்களுடைய நலன் காக்கின்ற தமிழ்நாடு

அரசு நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளும். இதைத்தவிர, 9 படகுகளை விடுவிக்க வேண்டும் என்று அங்கே இருக்கின்ற நீதிமன்றம் பல மாதங்களுக்கு முன்பாகவே, அவர்கள் சொல்லியும், அறிவுறுத்தியும், அந்த படகுகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை என்று மீனவர்கள் முறையிட்டார்கள். அது குறித்து விசாரிப்பதாகவும், உடனடியாக அதற்குரிய நடவடிக்கை எடுப்பதாகவும் திரு.முரளிதரன் அவர்கள் தெரிவித்தார்கள்.

இது குறித்து தமிழ்நாடு அரசு இரண்டு முறை இலங்கை அரசுக்கு கடிதம் எழுதி இருக்கிறது. அந்த 9 படகுகள் எடுத்து வருவதற்கு தகுதியான படகுகளா? என்பதை முதலில் பார்த்துவிட்டு நாங்கள் எடுத்து வருவதற்கு எங்களுக்கு அனுமதி வழங்கவேண்டும் என்று தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், அங்கிருந்து எந்த பதிலும் வரவில்லை. ஆகவே, இது குறித்து ஒன்றிய அமைச்சகம் தலையிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இது குறித்தும் நான் நிச்சயமாக கவனிக்கிறேன் என்று மாண்புமிகு திரு.முரளிதரன் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

**கேள்வி** : தொடர்ந்து இது போன்ற தடுப்பு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்கு முடிவு செய்திருக்கிறார்களா?

**பதில்** : மீனவர்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் கோரிக்கை என்னவென்றால், தொடர்ந்து இதுபோன்று நீடித்து போகக்கூடாது. இந்த முறை இரண்டு அரசுகளின் பேச்சு வார்த்தையின்போது, தொடர் நடவடிக்கைகள் இல்லாமல், தொடர்ந்து நீடிக்காமல் இருப்பதற்கு நீண்டகால முடிவு எடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு, ஒன்றிய அரசின் அமைச்சர் வந்த பிறகு கலந்தாலோசித்து முடிவெடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in